

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், சின்னப்புத்தூர் ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய்.5.85 கோடி மதிப்பீட்டில் சின்னப்புத்தூர் – வேலூர் செல்லும் சாலையில் மாநில சிறப்பு உதவி கட்டடத்தின் கீழ் சின்னக்கரை ஓடையின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் இல.பத்மநாபன், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு அதிமுக மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் மற்றும் ஒசூர் மாநகர கிழக்கு மண்டல குழு தலைவர் புருசோத்தம ரெட்டி , அதிமுக ஒசூர் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் நவீன்குமார் ஆகியோர் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையிலும், மாவட்ட செயலாளர் ஒசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஏற்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர். வருகிற 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை இவர்கள் தலைமையில் சுமார் 2000 க்கும் மேற்பட்டோர் ஒசூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைய உள்ளனர். உடன் ஒசூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் ராமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறையில் எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக இந்தியா கூட்டணி கட்சி ஆர்ப்பாட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன முழக்கம்!

மயிலாடுதுறை, நவ. 14 -

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தை கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கடந்த 11ம் தேதி மயிலாடுதுறையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் எஸ்.ராஜ்குமார் எம்.எல்.ஏ., கூட்டணி கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பி.சீனிவாசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏ.சீனிவாசன், ம.தி.மு.க. கொளஞ்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தாமு.இனியவன், சிவ.மோகன்குமார், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் எம்.நூருல்லா, ம.ம.க. ஜெ.அமீன், மாவீரன் வன்னியர் சங்கம் கே.மணி, மூவேந்தர் முன்னேற்ற கழகம் முனிபாலன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சி ஜெக.முருகன், திராவிட கழகம் குணசேகரன், ஆர்.சேகர், இரவிச்சந்திரன், கி.ரமேஷ், தாஜீதீன், ஹாஜாசலீம், ஷேக்அலாவுதின், செல்லைமுரலி, ஏ.ஷாஜகான் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினார்கள். ‘

ஆர்ப்பாட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் யலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் கழக உயர்நிலை செயற்குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம்,

சிர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் பி.பத்மாவதி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். ஆர்ப்பாட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி. சத்தியசீலன், ஏ.சி.என். விஜயபாலன், எம்.எம். சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்து. மகேந்திரன்,

மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம். சங்கர், என்.இளையபெருமாள், செல்லசேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், ஏ.ஜி.ஜெ. பிரபாகர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், பஞ்சுகுமார்,

ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர். ராஜா, கு.வைத்தியநாதன் நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி(எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, அண்ணாதுரை மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இன்னாள் நிர்வாகி கள், கூட்டணி கட்சியினர், கழகத்தினர் உள்ளிட்ட 4,000த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் நல்லாசிகளுடன், கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கோவை ராமநாதபுரம் பகுதியில் மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் ஏற்பாட்டில் கோவை ”DISTRICT FIREWALL’ அண்ணா அறிவகத்தை கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் V செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். இதில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் பி.ஆர்.அருள்மொழி, கழக நெசவாளர் அணி செயலாளர் கே.எம் நாகராஜ், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, கிணத்துக்கடவு தொகுதி பார்வையாளர் ரத்தினசாமி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரமேஷ் உள்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




வடகோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட பொறியாளர் அணி பகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை செந்தமிழ் செல்வன் தலைமையில், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ஆர்.கண்ணதாசன், துணை தலைவர் பா.வசந்தகுமார், துணை அமைப்பாளர்கள் பிரசாந்த் ராமமூர்த்தி, த.வைரமணி, என். வி.எஸ்.செந்தில்குமார், எம்.ஆண்டனி பீட்டர் உள்பட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர். வாக்காளர்

# சிறப்பு சீர்திருத்த பட்டியலை தீவிரமாக கண்காணிக்க வேண்டும்!

## சிவகங்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, நRவ. 14 -

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை ராயல் திருமண மண்டபத்தில் மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.



இந்த கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்று பேசினார் இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ, மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி ,முன்னால் எம்.எல்.ஏ .வி. ராஜசேகரன், இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் என். சாத்தையா ,மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் மோகன் ,ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் பசும்பொன் மனோகரன், திராவிட ர்கழகம் சார்பில் வைகறை , மூவேந்தர் முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர் நாகலிங்கம்,ம.ஜ.க. சார்பில் காஜா மைதீன், இந்தி,யயூனியன் முஸ்லிம் சார்பில் ஹைதர் அலி, மமக சார்பில் குல்கர்னி த.வெக சார்பில் மலை ராஜன், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ் .பாஸ்கரன் ஆகியோர் பேசினார்கள். இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர்கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது .பீகாரை அடுத்து தமிழகம் உட்பட 12 மாநிலங்களில் எஸ். ஐ .ஆர் .என்ற வாக்காளர் சிறப்பு தீவிர பட்டியல் தயாரிக்கும் பணி கடந்த 4ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது .இந்த சிறப்பு தீவிர எஸ்.ஐ.ஆர்ஐ .நாம் எதிர்ப்பதற்கு காரணம் பீகார் உட்பட பல்வேறு மாநிலங்களில் வாக்காளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தான் காரணம் ஆகும். வாக்காளர்கள் முறையாக சேர்க்கப்பட்டால் நாம் அதை எதிர்க்கப் போவதில்லை. தகுதியான வாக்காளர்கள் நீக்கப்படுகிறார்கள் . கோமாளித்தனமான கற்பனை செய்து பார்க்க முடியாத வாக்காளர் பட்டியல் சீர்திருத்தங்களை தேர்தல் ஆணையம் செய்வது மிகவும் வருத்தத்துக்குரிய ஒன்றாக உள்ளது . குறிப்பாக இதுபோன்ற செயல்களை நடுநிலை வைக்கும் தன்னாட்சி கொண்ட தேர்தல் ஆணையம் செயல்படகூடாது .இது 100 சதவீதம் மூழுமையாக செயல்படுமா என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. இது தமிழகத்தில் தற்போது நடைபெற வேண்டிய நேரம் கிடையாது . அதற்கு காரணம் வடகிழக்கு பருவமழை ,விவசாய வேலைகள் மூன்று மாதங்கள் வரை நடைபெறும் .இந்த நேரத்தில் இந்த வாக்காளர் திருத்தப்பட்டியல் என்பது முழு அளவில் நிறைவேறாது. மேலும் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் இத்தகைய பணியில் ஈடுபடுவார்கள் . அவர்கள் பணிசுமை கூடுதலாக வேறு அமையும். இது சர்வாதிகார நாட்டில் சர்வாதிகாரத்தனமாக செயல்படுவது போல் தோன்றுகிறது .நாடு சர்வாதிகார நாடாக கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறது. தேர்தல் ஆணையர்கள் நியமனத்திலும் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றது .பிரதமர் மோடி சர்வாதிகாரத்தை தேர்தல் ஆணையத்தின் மூலம் அரங்கேற்ற பார்க்கிறார் .அதற்கு தேர்தல் ஆணையம் கைப்பாவையாக மாறி வருகிறது. இத்தகைய வாக்காளர் சீர்திருத்த பட்டியல் தமிழகத்தில் தற்போது நடைபெற வேண்டாம் என்று தமிழக அரசின் சார்பில் முதல்வர்அவர்கள் தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் எழுதினார். ஆனால் அதை தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவசர அவசரமா க கூட்டம் நடத்தி அவசர அவசரமாக இத்தகைய எஸ். ஐ. ஆர் .திருத்தம் தேவை தானா என்பது யோசிக்க வேண்டி உள்ளது. இதற்கு முன் இருந்த தேர்தல் ஆணயர்கள் வாக்காளர் சீர்திருத்த பட்டியலை ஒருவருடம் வரை நடத்தி உள்ளார்கள். இது ஒரு அலங்கோலமாக முழுமையாக முற்றுப்பெறாத பணியாக நிறைவேறும். நமது தமிழக முதல்வர் அவர்கள் அகில இந்திய அளவில் இன்று ஜனநாயகத்தை பாதுகாக்கவும் மாநில சுயாட்சி உரிமைகளை பாதுகாக்கவும் முதல்வர் குரல் கொடுத்து போராடி வருகிறார். .இதற்காக பீகாரில் நடைபெற்ற ரோடு ஷோவில் முதல்வர் கலந்து கொண்டது இந்திய அளவில் உலக அளவில் பேசப்பட்டது. அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது .பா.ஜ.கவின் அடக்குமுறையை எதிர்த்து தேசிய அளவில் நமது முதல்வரின் செயல்பாடுகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அதிக அளவில் வலிமை மிக்க தலைவராக செயல்பட்டு இருக்கிறார் என்று பேசப்பட்டு வருகிறது. இங்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ .வி. ராஜசேகரன் ரஷ்ய புரட்சி ஏற்படுத்திய ஸ்டாலின் போல் தமிழகத்தின் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கு செயல்பட வேண்டும் என்று பேசினார் . அவரது ஆதங்கத்தை அவரது பேச்சில் காணமுடிந்தது. அவரது ஆசை யை விரைவில் முதல்வர் அவர்கள் நிறைவேற்றுவார் என்ற உறுதியை நான் தருகிறேன். தேர்தல் ஆணையம் பல ரூபத்தில், பல வேடங்களில், பல வழிகளில் பல மாநிலங்களில் செயல்பட்டு வரு கிறது .அதை மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகள் ஒருங்கிணைந்து எதிர்க்க வேண்டும் . தற்பொழுது வாக்காளர் திருத்தப்பட்டியலை முழுமையாக நாம் விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் . இதற்காக கழக தலைவர் முதல்வர் அவர்கள் உத்தரவின் படி வாக்கு சாவடி மூகவர்களுக்கு விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தி வருகிறோம். .ஆனால் நாம் முழு அளவில் விழிப்புடன் இதை கண்காணிக்க வேண்டும் . இதில் தேர்தல் ஆணையத்தின் அவசர அறிவிப்பு ,அவசர முறையில் எஸ் .ஐ .ஆர் .செயல்படுத்துவது தான் நமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. நமது மாநிலத்தைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் வாக்காளர் திருத்தப்பட்டியல் பணியில் ஈடுபட்டாலும் அவர்கள் நேர்மையாக செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உள்ளது .அவ்வாறு அவர்கள் செயல்படாமல் ஒருதலைப்பட்சமாக செயல்படுவதாக தெரிந்தால் நாம் தைரியமாக புகார் கூற வேண்டும். இப்பொழுது இந்திய தேர்தல் ஆணையத்தினால் நாம்4ம் தேதி முதல் நாம் அனைவரும் வாக்காளர் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. நாம் வாக்காளர்களாக மாறுவதற்கு வாக்காளர் திருத்தப்ப ட்டியல் சிறப்பு முகாமில் நம்மை முழு அளவில் நாம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் .பீகார் மாதிரி தமிழகத்தில் வாக்காளர் திருத்தப்பட்டியலில் முறைகேடுகள் நடைபெற வாய்ப்பில்லை .காரணம் அதற்கு நமது தமிழக முதல்வர் அவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். கடந்த 8 ஆண்டுகளாக நம்முடைய கூட்டணி கொள்கை கூட்டணியாக வலிமையான கூட்டணியாக உள்ளது. எனவே கூட்டணி தோழர்கள் அனைவரும் வாக்காளர் திருத்தப்பட்டியலை ஒன்றிணைந்து கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.. இந்த வெற்றி கூட்டணி 2026தேர்தலில் தொடரும். நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தலில் தொடர்ந்து வெற்றி பெற்றது போல் 100% வெற்றியை நாம் 2026ல் பெறுவோம். தேர்தல் ஆணையத்தை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுவது நமக்கெல்லாம் உடம்பிற்கு சூடு ஏற்றுவது போல் அமைந்துள்ளது. தொடர்ந்து நாம் 2026சட்டமன்றத் தேர்தலில் 100% வெற்றியடைய அனைவரும் ஒன்றிணைந்து பணிபுரிய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

முடிவில் சிவகங்கை நகர் கழக செயலாளர்சி. எம்.துரை.ஆனந்த் நன்றி கூறினார்.



கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவி மெகரியா பர்வீன் தலைமையில், திருமதி. அமுதா முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நகர மன்றத் தலைவர் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டைகள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கனிமொழி பத்மநாபன் அசுரப் அலி நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.